IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.108/2015

Deposition of Witness PW -3

| | |
|---|---|
| Name | : கோபால் வேலு இந்து ரெட்டியார் |
| Father's Name /W/o | : வேலு |
| Religion | : இந்து |
| Caste | : ரெட்டியார் |
| Calling | : விவசாயம் |
| Address | : மாங்காட்டுச்சேரி கிராமம், அரக்கோணம் தாலுக்கா. |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 20.07.2018

Chief Examination:

குறுக்கு விசாரணை -

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சம்மன் வந்ததா என்றால் வந்தது. சுப்பிரமணி மற்றும் அவரது மனைவி, ரத்தினம் மற்றும் பார்வதியின் மீது வழக்கு போட்டுள்ளார். வாதியும் , பிரதிவாதிகளும் பங்காளி முறைதான். நான் மாங்காட்டுசேரியில் வசிக்கிறேன். சொத்து மாங்காட்டுசேரியில் உள்ளது அதன் சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. சுப்பிரமணி , பார்வதியம்மாளுக்கு ரூ.57,500 பணத்தை குடும்ப செலவிற்காக கொடுத்தார். அது 93 வது வருடமாகும். தாவா சொத்தின் மீது குடும்ப செலவிற்காக பார்வதியம்மாள் பணம் பெற்றார். நான் கிரைய ஒப்பந்தத்தில் முதலாவது சாட்சியாக தான் கையெப்பம் போட்டேன். நாராயணசாமி என்று ஒருவர் என்னுடன் இருந்தார். அவர் சுப்பிரமணியின் பங்காளி ஆவார். நிலத்தின் மேல் பணம் பெற்றதற்காக தான் சாட்சிகையொப்பம் போட்டேன். அப்பொழுது பிரதிவாதிகள் தரப்பில் பார்வதியம்மாளும் அவரது கணவர் ரத்தினமும் தான் இருந்தார்கள். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 15 செண்டுக்களாகும். மேற்கில் கிராம குளமும், கிழக்கில் சிவன் கோவிலும், வடக்கில் வடிவேல் பிள்ளைநிலம். தெற்கில் பச்சையப்ப ரெட்டியார் நிலமும் உள்ளது. ஒப்பந்தத்திற்கு முன்பும் வாதி தான் குத்தகை முறையில் பயிர்

வைத்து இருந்தார். ஒப்பந்தத்திற்கு பிறகு வாதியிடம் தான் சொத்து ஒப்படைக்கப்பட்டது. ஒப்பந்தத்தில் 2வது சாட்சி கையெப்பம் போட்டவர் பெயர் நாராயணசாமி ஆகும். வாதியின் மனைவி என் பெரியப்பாவின் மகள் ஆவார். நான் சாட்சி கையொப்பம் போட்டதால் வாதிக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.